www.Padasalai.Net www.TrbTnpsc.com

PMM

# இரண்டாம் திருப்புதல் தேர்வு – 2024

12 - ஆம் வகுப்பு

# பொருளியல்

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

I அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 20 X 1 = 20

1. PQLI என்பது ............... ன் குறியீடு ஆகும். அ) பொருளாதார வளர்ச்சி ஆ) பொருளாதார நலன் இ) பொருளாதார முன்னேற்றம் ஈ) பொருளாதார மேம்பாடு
2. தனியார் மற்றும் அரசு சேர்ந்து பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடும் பொருளாதார அமைப்பை குறிப்பிடும் பதம் ............ ஆகும். அ) முதலாளித்துவ பொருளாதாரம் ஆ) சமத்துவ பொருளாதாரம் இ) உலகமயத்துவ பொருளாதாரம் ஈ) கலப்புப் பொருளாதாரம்
3. இந்தியாவில் நிதி ஆண்டு என்பது ........ . அ) ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 ஆ) மார்ச் 1 முதல் ஏப்ரல் 30 இ) மார்ச் 1 முதல் மார்ச் 16 ஈ) ஜனவரி 1 முதல் டிசம்பர் 31
4. குறைவான வட்டி வீதம் அ) நுகர்வைக் குறைக்கும் ஆ) கடனுக்கான செலவை உயர்த்தும் இ) சேமிப்பை ஊக்குவிக்கும் ஈ) கடனையும் செலவையும் அதிகரிக்கும்
5. J.P. சே ஒரு ............ . அ) புதிய தொன்மை பொருளியலாளர் ஆ) தொன்மை பொருளியலாளர் இ) நவீன பொருளியலாளர் ஈ) புதிய பொருளியலாளர்
6. ஒரு பொருளாதாரத்தில்..........இயக்கத்தை சே (Say) யின் விதி வலியுறுத்தியது அ) தூண்டப்பட்ட விலைக் கருவி ஆ) தூண்டப்பட்ட தேவை இ) தானியங்கும் விலைக்கருவி ஈ) தூண்டப்பட்ட முதலீடு
7. கீன்ஸின் கருத்துப்படி முதலீடு MEC ஐயும் .......... சார்ந்தது அ) தேவையையும் ஆ) அளிப்பையும் இ) வருவாயையும் ஈ) வட்டி வீதத்தையும்
8. ஏ.டி.எம் (ATM) என்பதன் விரிவாக்கம் என்ன? அ) தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் ஆ) சரி செய்வது பணம் வழங்கும் இ) தானாக பணம் வழங்கும் முறை ஈ) எந்த நேரமும் பணம் (Any Time Money)
9. [illegible] அ) ஒரு நாடு குறிப்பிட்டப் பொருளையும் வேறு நாடு மற்றொரு பொருளையும் உற்பத்தி செய்ய விரும்புகிறது . ஆ) உற்பத்தி வளங்கள் நாடுகளுக்கிடையே ஏற்றத்தாழ்வுடன் பகிரப்பட்டுள்ளது. இ) பன்னாட்டு வாணிகம் லாப குவிப்பு வாய்ப்பை அதிகரிக்கப்படுகிறது ஈ) நாடுகளில் நிலவும் வட்டி வீதம் வெவ்வேறு அளவில் உள்ளது
10. $M_1$ மற்றும் $M_2$ ஆகிய இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் அ) அஞ்சல் அலுவலக வைப்புகள் ஆ) வங்கியின் கால வைப்புகள் இ) வங்கியின் சேமிப்பு வைப்புகள் ஈ) காகிதப்பணம்
11. ஒரு வணிக வங்கி செய்யும் சேவை அ) வைப்புகளை ஏற்றுக் கொள்வது ஆ) கடன் வழங்குவது இ) அ மற்றும் ஆ ஆ) மேற்சொன்ன எதுவுமில்லை
12. பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு கீழ்கண்ட இதன் துணை அமைப்பாகும் அ) பன்னாட்டுப் பண நிதியம் ஆ) உலக வங்கி இ) சார்க் ஈ) ஆசியான்
13. அயல்நாட்டுச் செலுத்து நிலை உள்ளடக்கிய இனங்கள் அ) புலனாகும் பொருட்கள் மட்டும் ஆ) புலனாகாத பணிகள் மட்டும் இ) அ மற்றும் ஆ ஈ) பண்ட வாணிபம் மட்டும்
14. சத்துக்களை அதிகப்படுத்தும் செயல் எப்படி அழைக்கப்படுகிறது? அ) யூட்ரோபிகேசன் ஆ) சத்துக்களை கட்டுப்படுத்துதல் இ) செறிவூட்டல் ஈ) சிஸ்டோசோமியாசிஸ்
15. பன்னாட்டு பண நிதியத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம் அ) வாஷிங்கடன் டி.சி ஆ) நியூயார்க் இ) வியன்னா ஈ) ஜெனிவா
16. பொதுக்கடன் மாற்றுதல் என்பது அ) பழைய கடன் பத்திரங்களுக்குப் பதிலாக புதிய கடன் பத்திரங்களை மாற்றுதல் ஆ) அதிக வட்டி வீதம் கொண்ட கடன் பத்திரங்களுக்குப் பதிலாக இ) குறுகிய கால பத்திரங்களுக்குப் பதிலாக குறைவான வட்டி வீதம் கொண்ட கடன் பத்திரங்களைக் கொடுத்தல் ஈ) மேற்கூறிய அனைத்தும்
17. சொத்துகளை வைத்திருப்பவர்கள் (haves) மற்றும் சொத்துக்கள் இல்லாதவர்கள் (have - nots) பிரிவினை இல்லாதது? அ) சமதர்மம் ஆ) முதலாளித்துவம் இ) கலப்பு பொருளாதாரம் ஈ) உலகமயமாதல்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

18. கீழ்க்கண்டவற்றுள் எவை பின்தங்கிய நாடுகளின் பண்புகளில் ஒன்றாகும்.
அ) வறுமையின் நச்சு சுழற்சி ஆ) பெரும் நுகர்வை அதிகப்படுத்துதல் இ) தொழிற்சாலைகள் வளர்ச்சி
ஈ) அதிக அளவில் நகரமயமாதல்

19. x மற்றும் y மாறிகள் இரண்டும் ஒரே திசையில் மாறினால், உடன் தொடர்புக் கெழு எவ்வாறு இருக்கும்?
அ) நேர்மறையாக ஆ) எதிர்மறையாக இ) 0 ஈ) 1

20. அகவய காரணி எது?
அ) வாணிப நோக்கம் ஆ) கர்வநோக்கம் இ) முன்னேறும் நோக்கம் ஈ) இவை அனைத்தும்

பகுதி - ஆ

**குறிப்பு : i) எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. 2) வினா எண். 30 கட்டாய வினா.** 7 X 2 = 14

21. தற்போதுள்ள சூழலில் ஆள் குறைப்பிற்கான காரணத்தைத் தருக.
22. பணவீக்கம் என்ற பதத்தின் பொருள் தருக.
23. தேசிய வருவாய் கணக்கீட்டில் சுய நுகர்வு எவ்வாறு சிரமத்தைத் தருகிறது.
24. முடுக்கி - வரையறு.
25. பொன் திட்டம் என்றால் என்ன?
26. பன்னாட்டு வாணிகத்தின் அடிப்படைகளை விளக்குவதில் ஆடம் ஸ்மித்துக்கும் டேவிட் ரிக்கார்டோவுக்கும் உள்ள வேறுபாடு என்ன?
27. பொது நிதி வரையறு.
28. பூஜ்ய அடிப்படை வரவு செலவுத்திட்டம் குறிப்பு வரைக.
29. பொருளாதார திட்டமிடலின் வரைவிலக்கணம் எழுதுக.
30. தனிமனிதனுக்கு சரியானவை ஒரு நாட்டிற்கு சரியாக இருக்காது - விளக்குக.

பகுதி - இ

**குறிப்பு : i) எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. 2) வினா எண் 40 கட்டாயம்.** 7 X 3 = 21

31. முதலாளித்துவத்தின் சிறப்பினை வரிசைப்படுத்துக.
32. தொகு அளிப்பை வரைபடம் மூலம் விளக்குக.
33. தேசிய வருவாய் கணக்கீட்டின் - இருமுறை கணக்கீடுப் பிரச்சனைக்கு என்ன தீர்வு?
34. பெருக்கி கருத்தின் குறைபாடுகளைக் குறிப்பிடுக.
35. பண மதிப்பு பற்றிய கேம்பிரிட் சமன்பாடுகளை விளக்குக.
36. பண மதிப்பு நீக்கத்தின் நோக்கங்களை குறிப்பிடுக.
37. நவீன அரசின் பணிகள் யாவை?
38. இ.கழிவுகள் என்பதன் பொருள் தருக.
39. பொருளாதார அளவையியலின் நோக்கங்களை கூறுக.
40. J.M. கீன்ஸ் பற்றி சிறுகுறிப்பு தருக.

பகுதி - ஈ

**விரிவாக விடையளி.** 7 x 5 = 35

41. அ) நீடித்த அல்லது வளம் குன்றா வளர்ச்சி முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விளக்குக. ***(அல்லது)*** ஆ) பொருளாதார முன்னேற்றத்தை தீர்மானிக்கும் பொருளாதாரம் சார்ந்த காரணிகளை விவாதிக்கவும்.
42. அ) ஒப்புமைச் செலவுக் கோட்பாட்டினை விவாதிக்கவும். ***(அல்லது)***
ஆ) பொது நிதியின் எல்லைகளை விளக்குக.
43. i) தொன்மைக் கோட்பாடு மற்றும் கீன்ஸ் கோட்பாடு ஆகியவற்றிற்க இடையிலான வேறுபாடுகளை விளக்குக. ***(அல்லது)*** ஆ) பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை? விளக்குக.
44. அ) முடுக்கி இயங்கும் விதத்தினை விவரி. ***(அல்லது)*** ஆ) பணத்தின் பணிகளை விளக்குக.
45. அ) சேயின் அங்காடி விதியினை திறனாய்வு செய்க. ***(அல்லது)***
ஆ) நுகர்வுச் சார்பின் அக மற்றும் புறக் காரணிகளை விளக்குக.
46. அ) தேசிய வருவாயைக் கணக்கிடும் முறைகளை விளக்குக. ***(அல்லது)***
ஆ) தேசிய வருவாய் கணக்கீட்டில் உள்ள சிரமங்கள் யாவை?
47. அ) பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி. ***(அல்லது)***
ஆ) நடவடிக்கைகளை அடிப்படையில் ஒரு பொருளாதார அமைப்பு செயல்படுவதை விவரி.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
CamScanner